## September 3, 2025 - தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. வடகிழக்கு மாநிலங்களான மணிப்பூர் மற்றும் மிஸோரத்துக்கு செப்.13-இல் பிரதமர் நரேந்திர மோடி சுற்றுப் பயணம் மேற்கொள்வதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.
   i. மணிப்பூரில் கடந்த 2023, மே மாதம் முதல் மைதேயி மற்றும் குகி பழங்குடியினர் இடையே பெரும் கலவரம் வெடித்த பிறகு முதல்முறையாக பிரதமர் மோடி மணிப்பூருக்கு பயணிக்கிறார்.
   ii. அங்கு பைரபி-சாய்ராங் ரயில்வ ழித்தடத்தை அவர் திறந்துவைக்கவுள்ளதாக கூறப்படும் நிலையில் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டு வருகின்றன.
   iii. 2023-இல் இருந்து மைதேயி மற்றும் குகி பழங்குடியினர் இடையே அவ்வப்போது நிகழும் வன்முறைச் சம்பவங்களில் தற்போது வரை 260 பேர் உயிரிழந்துள்ளனர். வீடிழந்த ஆயிரக்க ணக்கானோர் நிவாரண முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.
2. மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்க சில சந்தர்ப்பங்களில் ஏற்படும் தாமதம் காரணமாக, அவற்றுக்கு ஒப்புதல் வழங்க குடியரசுத் தலைவர், ஆளுநர்களுக்கு காலக்கெடு விதிப்பதை நியாயப்படுத்த முடியாது என்று உச்சநீதிமன்றம் கருத்து தெரிவித்தது.
   i. தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி மசோதாக்கள் மீது முடிவு எடுக்காமல் தாமதப்படுத்துவதாக உச்சநீ திமன்றத்தில் தமிழக அரசு வழக்கு தொடுத்தது.
   ii. இந்த வழக்கில் தீர்ப்பளித்த உச்சநீதிமன்ற நீதிபதிகள் ஜே.பி.பார் திவாலா, ஆர்.மகாதேவன் ஆகியோர் அடங்கிய அமர்வு, 'மசோதாக்கள் மீது ஒரு மாதத்துக்குள் ஆளுநர்கள் முடிவு எடுக்க வேண் டும்; மசோதாக்களை குடியரசுத் தலைவருக்கு அனுப்புவதாக இருந்தால், அதை மூன்று மாதங்களுக்குள் செய்ய வேண்டும்.
   iii. குடியரசுத் தலைவரின் பரிசீனைக்காக மசோதாக்களை ஆளுநர் அனுப்பிவைத்தால், அந்த மசோதாக்கள் குறித்து குடியரசுத் தலைவர் மூன்று மாதங்களுக்குள் முடிவு எடுக்க வேண்டும் என்று காலக்கெடு நிர்ணயித்தது.
3. இமயமலையின் இந்தியப் பகுதியில் உள்ள 400-க்கும் மேற்பட்ட பனிப்பாறை ஏரிகள் விரிவடைந்து வருவது கவலையளிப்பதாகவும், இதை உன்னிப்பாக கவனித்து வருவதாகவும் மத்திய நீர் ஆணையம் தெரிவித்துள்ளது. பனிப்பாறை ஏரிகள், நீர்ப்பிடிப்பு பகுதிகள் குறித்த ஜூன்மாத அறிக்கையை நீர் ஆணையம் வெளியிட்டுள்ளது.
   i. அதில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது லடாக், ஜம்மு-காஷ்மீர், ஹிமாசல பிரதேசம், உத்தரகண்ட், சிக்கிம், அருணாசல பிரதேசத்தில் 432 பனிப்பாறை ஏரிகளில் திடீர் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டால் பெரும்சேதம் ஏற்படும் என்பதால் அவை உன்னிப்பாக கண்காணிக்கப்படுகின்றன.
   ii. மத்திய ஆணையம் கவலை இந்திய நிலப்பரப்பில் உள்ள 681 பனிப் பாறை ஏரிகளில் 432 ஏரிகள் 2023-ஆம் ஆண்டைவிட 2025 ஜூனில் அதிக நிலப்பரப்பில் நீர் தேங்கி விரி வடைந்துள்ளன. இவை பேரிடரை ஏற்படுத்தக் கூடியதாகும்.

iii. 2011-ஆம் ஆண்டுடன் ஒப்பிடு ஹிமாகையில், பனிப்பாறை ஏரிகளின் நிலப்பரப்பு 1,917 ஹெக்டேரிலிருந்து 2,508 ஹெக்டேராக அதிகரித்துள்ளது. இது 30.83 சதவீதம் அதிகமாகும்.

iv. இதில், அருணாசல பிரதேசத்தில் அதிகபட்சமாக 197 பனிப் பாறை ஏரிகளும், லடாக்கில் 120 ஏரிகளும், ஜம்மு- காஷ்மீரில் 57 ஏரிகளும், சிக்கிமில் 47 ஏரிகளும், ஹிமாசல பிரதேசத்தில் 6 ஏரிகளும், உத்தரகண்டில் 5 ஏரிகளும் விரிவடைந்துள்ளன. இமயமலைப் பகுதியில் மொத்தம் 1,435 பனிப்பாறை ஏரிகள் விரிவடைந்து வருகின்றன.

v. இதைக் கருத்தில்கொண்டு அதி நவீன கண்காணிப்பு அமைப்புகளையும், செயற்கைக்கோள் அடிப்படையிலான முன்னெச்சரிக்கை தகவல்களையும் அங்குவாழும்மக்களுக்குப் பகிரும் வகையில் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

vi. மத்திய நீர் அமைச்சகம், தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம்,மாநில பேரிடர் மேலாண்மை ஆணையம் ஆகியவை பூடான், சீனா ஆகிய நாடுகளுடன் ஒன்றிணைந்து இந்த விவகாரத்தில் செயல்பட வேண்டும். ஏனென்றால், இந்திய எல்லையைத் தாண்டியுள்ள பல ஏரிகளிலிருந்து அதிகமான நீர் இந்திய நதிகளில் பாய்கிறது.

vii. பருவநிலை மாற்றத்தால் இமயமலைப் பகுதி பனிப்பாறை உருகுதல் உள்ளிட்ட பல்வேறு பேரிடர் சவால்களை சந்தித்து வருகிறது என்று அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

4. இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையில் இந்தியர்கள் தொடர்ந்து முதலிடம் வகிக்கின்றனர். கடந்த ஆகஸ்ட் மாதம் இலங்கைக்கு 1,98,235 சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர். முந்தைய 2024-ஆம் ஆண்டின் அதே மாதத்தில் இந்த எண்ணிக்கை 1,64,609-ஆக இருந்தது.

   i. அந்த மாதத்தில், இந்தியாவில் இருந்து அதிகபட்சமாக 46,473 சுற்றுலாப் பயணிகள் வந்தனர். இந்தியாவுக்கு அடுத்தபடியாக பிரிட்டனில் இருந்து 17,764 பயணிகள் சுற்றுலா வந்துள்ளனர். ஜெர்மனியில் இருந்து 12,500 பேர் வந்துள்ளனர்.

   ii. சீனா, இத்தாலி, பிரான்ஸ், ஸ்பெயின், ஆஸ்திரேலியா, நெதர்லாந்து, ஜப்பான் ஆகிய நாடுகளில் இருந்தும் பலர் சுற்றுலா வந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

5. ஆப்கானிஸ்தானின் கிழக்குப் பகுதியில் திங் கள்கிழமை ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 1,400-ஐக் கடந்துள்ளது. ரிக்டர் அளவுகோலில் 6.0 அலகுகளாகப் பதிவான இந்த நிலநடுக்கம், மலைப்பகுதிகளையும் தொலைதூர கிராமங்களையும் பாதித்துள்ள நிலையில், அங்கு இடிபாடுகளில் உயிருடன் சிக்கியிருந்தவர்களை மீட்பதற்காக நடைபெறும் தேடுதல் பணிகள் காலத்துடன் நடைபெறும் சவாலாக உருவெடுத்துள்ளதாக ஐ.நா. அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

6. பாலஸ்தீனத்தை தனி நாடாக அங்கீகரிக்கவிரும்புவதாக பெல்ஜியமும் அறிவித்தது.

i. பாலஸ்தீனத்துக்கு தனிநாடு அந்தஸ்து வழங்குவதற்கான நடவடிக்கைகளைத் தொடங்கியுள்ளோம். வரும் செப். 9-ஆம் தேதி நடைபெறவுள்ள ஐ.நா. பொதுச் சபை கூட்டத்தில் இந்த முடிவு அறிவிக்கப்படும்.
ii. இருந்தாலும், காஸாவில் உள்ள பிணைக் கைதிகள் அனைவரும் விடுக்கப்பட வேண்டும்; காஸா ஆட்சிப் பொறுப்பை ஹமாஸ் படை கைவிட வேண்டும் ஆகிய இரு நிபந்தனைகளுடன்தான் இந்த முடிவு அமல்படுத்தப்படும் என்றார் அவர்.
iii. இஸ்ரேலும், பாலஸ்தீனமும் (மேற்குக் கரை, காஸா, கிழக்கு ஜெருசலேம் பகுதிகளைக் கொண்ட நிலப்பரப்பு) தனித் தனி சுதந்திர நாடுகளாக, ஒன்றையொன்று அங்கீகரித்துக் கொண்டு செயல்படுவதே நீண்ட காலமாக நீடித்துவரும் பாலஸ்தீன பிரச்னைக்கு ஒரே தீர்வு (இரு தேசத் தீர்வு) என்பது இந்தியா உள்ளிட்ட சர்வதேச நாடுகளின் நிலைப்பாடாக இருந்துவருகிறது.

7. 2026-27-ஆம் நிதியாண்டின் மத்திய பட்ஜெட் தயா ரிப்புக்கான பணிகளை நிதியமைச்சகம் அக்டோபரில் தொடங்கவுள்ளது.
   i. உலகளாவிய புவி -அரசியல் நிச்சயமற்ற சூழல் மற்றும் இந்தியப் பொருள்கள் மீதான அமெரிக்காவின் 50 சதவீத இறக்குமதிவரி விதிப்பின் பின்னணியில் 2026-27 பட்ஜெட் முக்கியத்துவம் பெற்றுள்ளது.
   ii. 2026-27 பட்ஜெட், அடுத்த ஆண்டு பிப்ரவரி 1-இல் தாக்கல் செய்யப்படும். கடந்த பட்ஜெட் தாக்கலின்போது, நாட்டில் தொடர்ந்து 8- ஆவது முறையாக பட்ஜெட் தாக்கல் செய்த முதல் நிதியமைச்சர் என்ற பெருமை நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனுக்கு சொந்தமானது.
8. குறைந்தபட்ச ஆதரவு விலையில் பருத்தி கொள்முதலை தடையின்றி மேற்கொள்வதற்கு வசதியாக 'கபாஸ் கிஸான்' என்ற புதிய செயலியை மத்திய ஜவுளித் துறை அமைச்சர் கிரிராஜ் சிங் தொடங்கிவைத்தார்.
   i. சுயமாக பதிவு செய்தல், கொள்முதலுக்கு வசதியான நேரத்தை தேர்வு செய்தல், பணப்பட்டுவாடா நிலையறிதல் உள்ளிட்ட வசதிகளின் வாயிலாக விவசாயிகளுக்கு அதிகாரமளிக்கும் இந்தச் செயலி, பருத்தி கொள்முதல் நடைமுறையில் அதிக வெளிப்படைத்தன்மை மற்றும் வசதியான-விரைவான செயல்பாட்டை உறுதிசெய்யும் என்று அமைச்சகம் தெரிவித்துள்ளது.
9. நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தலைமையில் அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் நிதிய மைச்சர்கள் பங்கேற்கும் சரக்கு மற்றும் சேவை வரி (ஜிஎஸ்டி) கவுன்சில் கூட்டம் புதன்கிழமை (செப்.3) தொடங்கி இரு நாள்கள் நடைபெறுகிறது.
   i. இந்தக் கூட்டத்தில் ஜிஎஸ்டிவிகி தங்களை 5%, 18% என இரண்டாக குறைப்பது மற்றும் புகையிலை, குட்கா மற்றும் பான் போன்ற குறிப்பிட்ட சில பொருள்கள் மீது 40% வரி விதிப்பது குறித்து முக்கிய முடிவு எடுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.
   ii. நாட்டில் ஒருசில மாநில வரிகள் தவிர பிற 17 வரிகள் மற்றும் 13 கூடுதல் வரிகளை ஒருங்கிணைத்து 2017, ஜூலை 1 -ஆம் தேதி ஜிஎஸ்டி

அறிமுகப்படுத்தப்பட்டது. அதன் கீழ் 5%, 12%, 18%, 28% ஆகிய நான்கு விகிதங்களில் வரி விதிக்கப்படுகிறது.

iii. இந்த வரி விதிப்பால் மாநிலங்களுக்கு ஏற்படும் வருவாய் இழப்பை ஈடுசெய்ய ஆடம்பர மற்றும் தீமை தரக்கூடிய பொருள்கள் மீது 1 முதல் 290 சதவீதம் வரி விதிக்கப்பட்டது. இந்த நடைமுறை முதல் கட்டமாக 2022, ஜூன் வரை 5 ஆண்டுகளுக்கு அமல்படுத்தப்பட்டது. அதன்பின் 2026 மார்ச் 1-ஆம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

iv. நிகழாண்டுடன் ஜிஎஸ்டி அறிமுகப் படுத்தப்பட்டு 8 ஆண்டுகள் நிறைவானதையொட்டி, அதை மேலும் எளிமைப்படுத்தும் விதமாக தீபாவளிக்குள் மக்கள் அன்றாடம் பயன்படுத்தும் பொருள்கள் மீதான ஜிஎஸ்டியை குறைக்கும் வகையில் அடுத்த தலைமுறை சீர்திருத்தம் (ஜிஎஸ்டி 2.0) மேற் கொள்ளப்படும் என சுதந்திர தின உரையில் பிரதமர் மோடி தெரிவித்தார்.

v. இதைத் தொடர்ந்து, 12%, 28% ஆகிய ஜிஎஸ்டி விகிதங்களை நீக்கிவிட்டு 5%, 18% என்ற இரு விகித நடைமுறையைப் பின்பற்றுவது, புகையிலை, குட்கா மற்றும் பான் மசாலா போன்ற குறிப்பிட்ட சில பொருள்கள் மீது மட்டும் 40% வரி விதிப்பது தொடர்பான முன்மொழிவை மாநில நிதியமைச்சர்கள் குழுவுக்கு (ஜிஓஎம்) நிதியமைச்சகம் வழங்கியது.

vi. இந்த முன்மொழிவுக்கு கடந்த ஆக. 20, 21 ஆகிய தேதிகளில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தின் போது ஜிஓஎம் ஒப்புதல் அளித்தது.